| O.S.No. 50/2025 | PW1: திரு. மகாதேவன் த/பெ. திரு. பரசுராமன் | 03-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் 7–ம் வகுப்பு படித்துள்ளேன். விவசாயம் செய்கிறேன். என்ன வருமானம் வருகிறது என்றால் மாதம் ரூ.20,000/– வருமானம் வருவதுபோல் விவசாயம் செய்து வருகிறேன். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. பிரதிவாதி உறவினர் இல்லை, ஒரே தெருவை சேர்ந்தவர். பிரதிவாதி எனக்கு பழக்கமானவர். எனக்கு சொந்தமான சொத்துக்கு பக்கத்தில் பிரதிவாதி பயிர் வைக்கிறார். அது சம்மந்தமாக எனக்கும் பிரதிவாதி குடும்பத்திற்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றால் இல்லை.

2. இந்த கடனிற்கு முன்பு பிரதிவாதிக்கு எப்போது கடன் கொடுத்தீர்கள் என்றால் இந்த கடன்தான் கொடுத்தேன், அதற்கு முன் கொடுக்கவில்லை. எனக்கும் பிரதிவாதி குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ரூ.5,00,000/– கடன் கொடுத்தேன். அதற்கு சாட்சியாக சுரேஷ், லட்சுமிநாராயணன் கையெழுத்து போட்டார்கள், பாண்டினை மகாதேவன் எழுதினார். மகாதேவன் எனக்கு தெரிந்த நண்பர்.

3. எனது மாமியார் வீட்டின் நிலத்தை விற்று என் மனைவிக்கு கொடுத்த பணத்தினைத்தான் நான் பணம் கொடுத்தேன், அந்த நில விற்பனையானது பணம் கொடுப்பதற்கு முன்பு நடந்தது. நிலம் விற்பனை செய்ததற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்வேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை.

4. 2016-ம் வருடத்திற்கு பின்பு ரூ.2,00,000/-த்திற்கு மேல் பணம் கொடுத்தால் ரொக்கமாக கொடுக்கக்கூடாது என்றும், ஆன்லைன் மூலமாகத்தான் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்ற விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. 5 வருடத்திற்கு முன்பு பிரதிவாதி என்னிடம் ரூ.2,00,000/- கடன் வாங்கிக்கொண்டு அதற்கு முறையாக வட்டி செலுத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 5 வருடத்திற்கு முன்பு கொடுத்த பாண்டு காலாவதியாகிவிட்டதால் நான் அதனை திருத்தம் செய்து தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

5. வா.சா.ஆ.1 பாண்டில் உள்ள கையெழுத்து வேறுபட்டுள்ளது என்றாலும், அது பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றாலும் சரியல்ல, அது அவருடைய கையெழுத்துதான். பிரதிவாதி குடும்ப சூழ்நிலை காரணமாக ரூ.2,00,000/-த்தை கொடுக்க முடியவில்லை என்பதால் நான் இந்த வழக்கினை போட தயாராகினேன் என்றாலும், அதனை கேள்விப்பட்டு பிரதிவாதி என்னை வந்து பார்த்தார் என்றாலும் சரியல்ல.

6. நான் கொடுத்த அறிவிப்பை பிரதிவாதி என்னிடம் காண்பித்து கேட்டதற்கு நான் பயமுறுத்த அனுப்பினேன் என்றும், ரூ.2,00,000/- கொடுத்தால் வழக்கு போடமாட்டேன் என்று சொல்லி அனுப்பினேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு நான் சொன்னதற்கு உரிய சாட்சிகள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாண்டானது தட்டச்சு செய்யப்பட்டதும், அதில் மையினால் எழுதப்பட்ட ஆவணமாகும். பிரதிவாதி என்னிடம் வாங்கிய ரூ.2,00,000/- கடனை கொடுக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக பூர்த்தி

செய்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.03 20:12:38 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**